# செங்கல்பட்டு மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின் 2020-21 ஆம் நிதியாண்டிற்கான ஆண்டு அறிக்கை

-௦-௦-௦

தமிழ்நாடு மாவட்ட கனிம கட்டமைப்பு விதிகள் 2017–ன்படி, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணை எண்.8218 / கனிமம் / 2020 நாள்.08.12.2020ன்படி, செங்கல்பட்டு மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை கீழ்க்குறிப்பிட்டுள்ள அலுவலர்களை அங்கத்தினர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்ட அறக்கட்டளைப் பத்திரமானது ஆவண எண்.34/2020-ன்படி, செங்கல்பட்டு சார்பதிவாளர் அலுவலகத்தில் 09.12.2020 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | நிர்வாகக் குழு அமைப்பு | வ. எண். | மேலாண்மைக் குழு அமைப்பு |
|---|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சியர்,<br>செங்கல்பட்டு. | 1 | மாவட்ட ஆட்சியர்,<br>செங்கல்பட்டு. |
| 2 | மாவட்ட வருவாய் அலுவலர்,<br>செங்கல்பட்டு. | 2 | மாவட்ட வருவாய் அலுவலர்,<br>செங்கல்பட்டு. |
| 3 | உதவி இயக்குநர்,<br>புவியியல் மற்றும் சுரங்கத்துறை,<br>செங்கல்பட்டு. | 3 | உதவி இயக்குநர்,<br>புவியியல் மற்றும் சுரங்கத்துறை,<br>செங்கல்பட்டு. |
| 4 | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,<br>செங்கல்பட்டு. | 4 | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,<br>செங்கல்பட்டு. |
| 5 | துணை இயக்குநர்,<br>சுகாதாரப் பணிகள்,<br>செங்கல்பட்டு. | 5 | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்,<br>செங்கல்பட்டு. |
| 6 | முதன்மை கல்வி அலுவலர்,<br>செங்கல்பட்டு. | 6 | உதவி இயக்குநர்,<br>ஊரக வளர்ச்சித்துறை,<br>செங்கல்பட்டு. |
| 7 | மாவட்ட கருவூல அலுவலர்,<br>செங்கல்பட்டு. | 7 | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்,<br>செங்கல்பட்டு. |
| 8 | மாவட்ட சமூக நல அலுவலர்,<br>செங்கல்பட்டு. | 8 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம்,<br>மறைமலைநகர். |

| | | | |
|---|---|---|---|
| 9 | உதவி இயக்குநர், (ஊராட்சிகள்), செங்கல்பட்டு. | 9 | மாவட்ட வன அலுவலர், செங்கல்பட்டு.. |
| 10 | திரு. கே. தனசேகர், தலைவர், காஞ்சிபுரம் மாவட்ட கருங்கல் குவாரி ஒப்பந்த தாரர்களின் நலவாழ்வு சங்கம். | 10 | செயற்பொறியாளர்,<br>பொதுப்பணித்துறை,<br>நீர்வள ஆதார துறை,<br>செங்கல்பட்டு. |
| | | 11 | உதவி இயக்குநர்,<br>நில அளவைப் பதிவேடுகள் துறை,<br>செங்கல்பட்டு. |
| | | 12 | மாவட்ட கருவூல அலுவலர்,<br>செங்கல்பட்டு. |
| | | 13 | மாவட்ட சமூக அலுவலக அலுவலர்,<br>செங்கல்பட்டு. |
| | | 14 | துணை இயக்குநர்,<br>பொது சுகாதார மையப் பொறுப்பாளர்,<br>சுகாதாரப் பணிகள்,<br>செங்கல்பட்டு. |
| | | 15 | வருவாய் கோட்ட அலுவலர்,<br>செங்கல்பட்டு. |
| | | 16 | வருவாய் கோட்ட அலுவலர்,<br>மதுராந்தகம். |

செங்கல்பட்டு மாவட்ட கனிம அறக்கட்டளைக்காக, இந்தியன் வங்கி, செங்கல்பட்டு வங்கிக் கிளையில் வங்கி வணக்கு (கணக்கு எண்.6957390475) துவக்கப்பட்டு, சிறுவகை கனிமங்கள் குவாரி செய்ய அரசுக்கு செலுத்தப்படும் உரிமக் கட்டணத்தின் அடிப்படையில் உரிய விதிகளின்படி மாவட்ட கனிம கட்டமைப்பிற்காக நிதி வசூலிக்கப்பட்டு வருகிறது.

செங்கல்பட்டு மாவட்டத்தில் 12.01.2015–க்கு முன்னர் குத்தகை உரிமம் சாதாரண கற்குவாரிக்கு ஏற்கனவே செலுத்தப்பட்ட உரிமக்கட்டணத்தில் 30 சதவிகித தொகையை கனிம அறக்கட்டளை நிதிக்கு செலுத்திட சம்பந்தப்பட்ட குத்தகைதாரருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் டெண்டர் மற்றும் பொது ஏலத்தின் மூலம் எந்த குவாரியும் இல்லை. மேலும், 12.01.2015–க்கு பின்னர் சிறுவகை கனிமங்களாக கிராவல் மற்றும் சவுடு

மண் ஆகியவற்றை ஊராட்சி ஏரி மற்றும் பொதுப்பணித்துறை ஏரிகளிலிருந்து வெட்டி எடுத்துக் கொள்ள தற்காலிக அனுமதிகள் வழங்கப்படும் இனங்களுக்காக செலுத்தப்படும் உரிமக் கட்டணத்தில் 10 சதவிகித தொகை கனிம அறக்கட்டளை நிதியாக வசூல் செய்யப்பட்டு வருகிறது.

செங்கல்பட்டு மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக செங்கல்பட்டு மாவட்டத்தினை தோற்றுவிக்கப்பட்ட நாள் 12.11.2019 முதல் 08.12.2020 வரை வசூலிக்கப்பட்ட தொகை ரூ.71,93,710/-ம், மேலும் 09.12.2020 முதல் 31.03.2021 வரை ரூ.14,66,378/-ம், மேலும் உயர்நீதிமன்ற உத்திரவின் மூலம் செலுத்தப்படும் அறக்கட்டளை நிதி ரூ.14,90,000/-ம், வங்கியில் பணம் இருப்பு வைக்கப்பட்டதற்காக வட்டி ரூ.75,484/-ஆக மொத்த வரவு ரூ.1,02,39,572/-இதுநாள் வரை மாவட்ட கனிம அறக்கட்டளை நிதியிலிருந்து செங்கல்பட்டு மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை அலுவலக செலவிற்காக மொத்த வரவிலிருந்து 5% ரூ.1,12,848/- ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளது. மேலும் இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை அலுவலக செலவினத்திற்காக மொத்த வரவிலிருந்து 1% ரூ.22,574/-ஐ செலவழிக்கப்பட்டு தற்போது ரூ.1,00,90,150/- (ரூபாய் ஒரு கோடியே தொன்னூறு ஆயிரத்து நூற்றி ஐம்பது மட்டும்) செங்கல்பட்டு மாவட்ட அறக்கட்டளை வங்கி கணக்கில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

செங்கல்பட்டு மாவட்டத்தில் குவாரிப்பணிகளால் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளாக 55 கிராம ஊராட்சிகள் கண்டறியப்பட்டு 2020-2021 ஆம் நிதியாண்டில் நிர்வாகக் குழு மற்றும் மேலாண்மைக் குழு ஒப்புதல் பெறப்பட்டது.

2020 – 2021 ஆம் நிதியாண்டில் செங்கல்பட்டு மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட திட்டங்களுக்கு ரூ.65,71,728/- மதிப்பிலான நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விவரம் | மதிப்பு (ரூபாயில்) | நடைமுறைப்படுத்தும் அமைப்பு | ஒப்பளிப்பு வழங்கப்பட்ட நாள். |
|---|---|---|---|---|---|
| 1 | மக்கள் நலன், சுகாதார மேம்பாடு | மருத்துவ மனைக்கான திட்ட உபகரணங்கள் கொள்முதல். | 45,71,628 | துணை இயக்குநர் (சுகாதாரம்), செங்கல்பட்டு. | 15.02.2021 |
| 2 | குடிநீர் வழங்கல் | காஞ்சிபுரம் ஹைரோடு இடதுபுறம் பைபாஸ் சாலை வழியாக பழவேலி பம்ப் ஹவுஸில் 250 மி.மீ. குழாய் அமைத்தல் | 20,00,000 | நகராட்சி ஆணையர், செங்கல்பட்டு. | 17.02.2021 |
| | | **மொத்தம்** | **65,71,628** | | |

மாவட்ட கனிம வள அறக்கட்டளை நிதியை மாநில தலைமை கணக்காயரால் அங்கீகரிக்கப்பட்ட தணிக்கையாளர்களை கொண்டு 2020-2021 நிதியாண்டிற்கான கணக்குகள் தணிக்கைக்காக தணிக்கையாளர் நியமிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தலைவர்,
செங்கல்பட்டு மாவட்ட கனிம கட்டமைப்பு
அறக்கட்டளை மற்றும் மாவட்ட ஆட்சியர்,
செங்கல்பட்டு.